உடுக்குறியிடாத வினாக்கள்

Aseptic Packaged Milk.

61 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Dairy Development be pleased to state:

(*a*) whether the Government are aware of the fact that aseptic packaged milk, which can be kept for a fortnight, has been introduced to consumers in Bombay by the Gujarat Co-operative Milk Marketing Federation; and

(*b*) if so, whether there is any proposal with the Government, to introduce such a packaged milk through the Tamil Nadu Dairy Development Corporation?

விடை—

(அ) நீண்ட நாட்களுக்குக் கெடாமல் பாதுகாக்கப்பட்ட பால் (Aseptic Packaged Milk) பம்பாயில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்கப் படுவதை அரசு அறியும்.

(இ) அதே முறையில். தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தின் மூலம் செயல்படுத்தும் திட்டம் எதும் தற்போதைக்கு அரசின் பரிசீலனையில் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

பேரறிஞர் அண்ணா பிறந்த தினவிழா.

62. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1983 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தின விழாவை தமிழக அரசு கொண்டாடியதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

விடை—

(அ) ஆம்.

(இ) எழவில்லை.

1984 மார்ச் 13]

தந்தை பெரியார் பிறந்தநாள் விழா.

63. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1983 ஆம் ஆண்டு, தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாள் விழாவை தமிழக அரசு கொண்டாடியதா ?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

விடை—

(அ) ஆம்

(இ) எழவில்லை.

Writing Examinations during Medical Leave.

64 *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether there is any Government Order or Service Rules which provide for taking disciplinary action against Teachers who write University Examinations during their Medical Leave ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the reasons for the same ?

விடை—

(அ) இல்லை.

(இ) மற்றும் (உ) எழாது.

Diploma in Pharmacy Course.

65 *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether it is a fact that facilities are available at Madras Medical College for reviving the Diploma in Pharmacy Course ; and

(*b*) if so, whether there is any proposal to start such a course in the above college ?

விடை—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சத்துணவுத் திட்டம்.

66. **வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** மாண்புமிகு சத்துணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் துவக்கப்பட்டதிலிருந்து 1—10—1982 வரை, இத்திட்டத்தினால் பயனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை மாநிலம் முழுவதிலும் மாவட்ட வாரியாக எத்தனை பேர் ?

(இ) மாவட்ட வாரியாக ஆண்கள், பெண்கள் எத்தனை பேர் ?

(உ) இத்திட்டம் துவங்கப்பட்ட பிறகு 1—10—1982 வரை. மாநிலம் முழுவதும் பள்ளி செல்லும் வயதடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு அதிகரித்துள்ளது ?

விடை—

(அ) மாவட்ட வாரியான எண்ணிக்கை கலம் 1-ல் @ கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) மாவட்ட வாரியான ஆண், பெண் எண்ணிக்கை கலம் 2-ல் @ கொடுக்கப்பட்டுள்ளது.

(உ) இத்திட்டம் துவங்கப்பட்ட பிறகு 1—10—1982 வரை தமிழ் மாநிலம் முழுவதும் பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை 2,62,139 அதிகரித்துள்ளது. மாவட்ட வாரியான எண்ணிக்கை கலம் 3-ல் @ கொடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

@ 95-97 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.